ஆகவே, அந்த வெரைட்டியை இதுபோன்ற தீவிரத் திட்டங்களில் மேற்கொண்டு பரப்புகின்ற திட்டத்தைச் செயல்படுத்துமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: மாண்புமிகு உறுப்பினர் தெரிவிப்பது ட்வார்ஃப் வெரைட்டி; சென்னை போன்ற நகரங்களிலே தோட்டத்திலே இதை வைத்திருக்கிறார்கள். அது பெரிய காயாக இருக்க முடியாது; நிறைய இருக்க முடியாது.

திரு. ஏ. எம். இராஜா: பெரிய காய், ஆயிரம் காய்..........

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: ஆயிரம் காய்—அது கோயம் பத்தூரிலே விளைகிறது என்று சொன்னால் எந்த இடத்தில் என்று எனக்குத் தெரிவித்தால் நன்றாக இருக்கும். கோவையிலே ஆயிரம் காய் விளைகிற இடம் இருக்கிறது என்று சொன்னால் அது எங்கிருக்கிறது? டெல்லியிலே கூட அது மாதிரி விளைகிறது என்று சொன்னால் நான் நம்பத் தயாராக இல்லை. அங்கே ஒன்றிருக்கிறது என்று சொல்லி, நான் போய்ப் பார்த்தேன். சுற்றிக் கண்ணாடி வைத்து, துளை போட்டு, சூடான காற்றை உள்ளே புகுத்தி, தென்னை மரம் ஒன்றை காட்சிக்காக வைத்திருக்கிறார்கள். ஆகவே, டெல்லி போன்ற வட இந்தியப் பகுதிகளிலே விளையாது. கோவையிலே ஈரோட்டில் விளைகிறது. அதற்கு அரசு உதவி கொடுக்கிறது. ஆனால் ட்வார்ஃப் வெரைட்டியைப் பற்றி என்னிடம் தகவல் இல்லை.

திரு. ஏ. எம். இராஜா: அது இராஜபாளையத்திலே.

திரு. கே. ஏ. வகாப்: தலைவரவர்களே, தென்னையானது தாளால் பெற்ற நீரைத் தலையால் தருவது என்ற அளவு நன்றியோடு சொல்லப் படுகிறது. அப்படிப்பட்ட தென்னை நீரானது சில ஏரியாக்களிலே உப்பாகவும், சில ஏரியாக்களிலே இனிப்பாகவும் இருக்கிறது. ஆகவே, எல்லாமே இனிப்பு இளநீராக இருக்கச் செய்வதற்கு வேண்டிய ஆராய்ச்சியை அமைச்சரவர்கள் செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: இளநீர் உப்பாக இருக்கிறது என்று சொல்கிறார்களா அல்லது உப்பு நீர் பாய்ச்சப்படுகிறது என்று சொல்கிறார்களா? உப்பு நீர் பாய்ச்சினாலும் தென்னை மரம் வளரும் என்று சொல்கிறார்கள். உப்புத் தண்ணீரில் வளர்கிற தென்னை மரத்தின் இளநீர் உப்பாக இருக்கிறது என்பது அல்ல. உப்புத் தண்ணீரில் வளர்ந்த மரத்தின் இளநீர் இனிப்பாக இருக்கிறது.

தேவிகோட்டை—பூவந்தி சாலையில் பாலம்.

*427 வினா—திரு. த. சோணையா: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

1975 மார்ச் 22]

திருப்புவனம் ஊராட்சி ஒன்றியம், தேவிகோட்டை—பூவந்திக்கு இடையில் உள்ள ஓடையில் மேம்பாலம் கட்டும் திட்டம் அரசிடம் உண்டா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: இல்லை.

திரு. த. சோனையா: நம்முடைய அமைச்சரவர்கள் இல்லை என்று சொல்கிறார்கள். எந்த ஊருக்கும் எந்த ஊருக்கும் இடையே இல்லையென்று சொல்கிறார். ஏனென்றால், கேள்வியே மாறுபட்டு வந்திருப்பதால், கேள்வியைச் சொல்லி பதிலைத் திரும்பவும் சொல்வாரா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: மாடபுரம் தேனி—ஏர தி சாலை. அதனுடைய நீளம் 9.2 கிலோ மீட்டர். மண் வேலைகள் எல்லாம் முடிந்து விட்டன. அவர் கேட்டிருப்பது பாலம் கட்டுவது முடியுமா என்பது. அதற்கு ரூ. 2 இலட்சம் செலவாகும் என்பதனாலே, வறட்சி நிதியிலிருந்து செலவு பண்ண முடியாது. ஆகவே, பணம் வந்த பிற்பாடு செலவு செய்யப்படும்.

கும்முடிப்பூண்டி ஒன்றியத்தில் தெரு விளக்குகள்.

*428 வினா—திரு. கா. வேழவேந்தன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கும்முடிப்பூண்டி ஊராட்சி ஒன்றியம், பெரிய பாளையத்தான் கண்டிகை, கோவந்தராச கண்டிகை ஆகிய கிராமங்களில் இது வரை தெரு விளக்குகள் அமைக்கப்படவில்லை என்பது உண்மையா?

(இ) ஆம் எனில் மேற்கண்ட ஊர்களில் தெரு மின் விளக்குகள் அமைக்க மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: (அ) ஆம்.

(இ) செங்கை மாவட்ட ஆட்சித் தலைவர் தமது அறிக்கையில் பெரிய பாளையத்தான் கண்டிகை, கோவந்தராச கண்டிகை ஆகிய மதுராக்களில் தெரு மின் விளக்குகள் அமைக்க குருவராச கண்டிகை ஊராட்சி தீர்மானம் நிறைவேற்றியிருப்பதாகவும், மேற்படி தீர்மானத்திற்கு ஏற்ப தெரு மின் விளக்குகள் அமைக்க மின் வாரியத்தை அணுகி நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று கூறியுள்ளார்.

பொன்னம்பலசாமி மடம்.

*429 வினா—திரு. எஸ். முருகையன்: மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தென்னாற்காடு மாவட்டம், சிதம்பரத்திலுள்ள பொன்னம்பலசாமி மடத்திற்குச் சொந்தமான நஞ்சை, புஞ்சை நிலங்கள் சிலவற்றை விற்க அறநிலையத்துறை ஆணையாளரிடம் அனுமதி பெறப்பட்டதா?